**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**நவம்பர், திசம்பர் – 2014**

**A021 இலக்கணம் – 2(சொல்)**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

**(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)**

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. 'சாவி' என்னும் சொல் எந்த மொழிக்கு உரிய சொல்?
2. 'மரம்' என்பது இடுகுறிப் பெயரா? காரணப் பெயரா?
3. ஒன்று என்னும் எண்ணின் அடியாகப் பிறக்கும் பெண்பால் பெயர் யாது?
4. வேற்றுமை எத்தனை வகைப்படும்?
5. வினைச்சொல் வேற்றுமை உருபை ஏற்குமா?
6. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்திற்கு ஒரு சான்று தருக.
7. வினையெச்ச வாய்பாடுகள் எத்தனை?
8. காலம் எத்தனை வகைப்படும்?

9. ஓரெழுத்து ஒருமொழிச் சொற்கள் எத்தனை என்று நன்னூலார் குறிப்பிடுகின்றார்?
10. செவ்வான் அன்ன மேனி – இத்தொடரில் உவம உருபாக வரும் சொல் எது?
11. 'உறு' என்னும் உரிச்சொல் எப்பொருளை உணர்த்தும்?
12. கற்றவர்க்கும், கல்லாதவர்க்கும் பொருள் விளங்குமாறு தொன்றுதொட்டு வழங்கி வரும் சொல் எது?
13. காலம் கரந்த பெயரெச்சம் என்று எதனைக் குறிப்பிடுவர்?
14. தொகாநிலைத் தொடர் எத்தனை வகைப்படும்?
15. இரக்கும் சொற்கள் யாவை?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.**

**(5x3=15)**

1. மதிப்புப் பன்மை என்றால் என்ன என்பதைச் சான்று தந்து விளக்குக.
2. பெயர்ச் சொல்லின் வகைகளைச் சான்றுடன் குறிப்பிடுக.
3. வியங்கோள் வினையைச் சான்றுகள் தந்து விளக்குக.
4. இறந்த காலம் காட்டும் இடைநிலைகள் யாவை? சான்றுடன் அவற்றை விளக்குக.
5. உரிச்சொல்லின் பொது இலக்கணம் யாது?
6. இடைச்சொல்லின் வகைகள் எத்தனை? அவை யாவை?
7. அடுக்குத் தொடரைச் சான்றுகள் காட்டி விளக்குக.
8. மரபு வழுநிலை என்றால் என்ன? சான்று தந்து விளக்குக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) இலக்கிய வகைச் சொற்கள் பற்றிக் கூறப்பட்டுள்ள கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

(ஆ) வேற்றுமை வகைகளை விளக்கி ஒரு கட்டுரை வரைக.

2. (அ) வினை வகைகளாகக் கூறப்படுவனவற்றைச் சான்றுகள் தந்து விளக்குக.

(அல்லது)

(ஆ) கால மயக்கம் குறித்து ஒரு கட்டுரை எழுதுக.

3. (அ) கடி என்னும் உரிச்சொல் உணர்த்தும் பொருள்களையும், அச்சொல் அடையும் திரிபுகளையும் சான்று தந்து விளக்குக.

(அல்லது)

(ஆ) அறுவகை வினா, எண் வகை விடை – இவற்றைச் சான்றுகள் தந்து விளக்குக.